DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 5

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் (Lw - 6) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 02.09.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், அலங்காநத்தத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பூங்கொடி எனது மனைவி, ஆஜர் எதிரிகள் எனது மருமகன் மற்றும் எனது சம்மந்தி ஆவார்கள். தேதி நினைவில் இல்லை, சுமார் 5 வருடம் இருக்கும். பூங்கொடி என்னை தொடர்புகொண்டு ஆஜர் எதிரிகள் தன்னை அவர்களுடைய மல்லிகைப்பூ தோட்டம் அருகே அடித்துவிட்டதாக கூறினார் மேலும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு செல்வதாக கூறினார். பின்னர் சம்பவ இடத்தில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு நினைவில் இல்லை. போலிசார் கேட்டதால் போட்டுகொடுத்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். **(**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள **2**வது கையொப்பம் மட்டும் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக

சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் சம்பவ இடத்தில் இருந்து சம்பவத்திற்கு பயண்படுத்திய மண்வெட்டி புடியை கைப்பற்றுதல் மகஜர் மூலம் என் முன்னால் கைபற்றினார்கள் என்றும் அதற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் எனக்கு சரியாக நினைவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததற்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் கழித்து நான் எனது மனைவியை மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றால் இரண்டு நாட்கள் கழித்து சென்று பார்த்தேன். மேற்படி சம்பவம் நடந்ததற்கு பின்னிட்டு இரண்டு நாட்கள் நான் எங்கு இருந்தேன் என்றால் மகாராட்டிராவிற்கு லாரி ஓட்டுநராக சென்றிருந்தேன். போலிசார் என்னிடம் மேற்படி பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்துகளை எப்போது பெற்றார்கள் என்றால் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து நான் ஊருக்கு வந்தபின் அன்று மாலை என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். கையொப்பம் என்னிடம் எங்கு வைத்து பெற்றார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து பெற்றார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கு எதற்காக யார் அழைத்து சென்றேன் என்றால் போலிசார் அழைத்ததன் பேரில் சென்றேன். நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது மகளுக்கும் எனது மருமகனுக்கும் விவாகரத்து பெற்று இரண்டு வருடம் முடிந்துவிட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowlweldge by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**